**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : MC.14/2022 & DVC.6/2022 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : PW-1 | Village: | |
| Name | : சுபா | | |
| | | Taluk | : |
| Father's/Husband's Name | : தமிழ்செல்வன் | Age | : 38 |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of the day of 06.11.2025.**

<u>**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை.**</u>

முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். 2009 ம் ஆண்டு திருமணம் ஆனதிலிருந்து 2022 ம் ஆண்டு வரை எங்களது குடும்ப வாழ்க்கை சுமூகமாக இருந்தது என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பின்னிட்டு எனது கணவர் அடிக்கடி வெளிநாடு செல்வார் என்றால் 2016 ம் ஆண்டிற்கு பின்னிட்டு ஓராண்டு அல்லது 3 மாதம் 6 மாதம் காலத்திற்கு ஒருமுறை சென்று வருவார். எனது கணவர் வாகன ஓட்டுநராக வேலை செய்து வருவதால் அடிக்கடி சென்று வர இயலாது என்றால் சரியல்ல. வெளிநாட்டில் ஓட்டுநர் வேலை பார்ப்பதாகதாகவும் வேறு வருமான இருப்பதாகவும் மனுவில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொந்த வீடு இருப்பதாக சொல்லியுள்ளேன். எனது கணவருக்கு சொந்தமான வீட்டை வாடகைக்கு விடவில்லை என்றால் சரிதான். நான் எனது தாயார் வீட்டில் ஆடுதுறையில் வசித்து

வருகிறேன். எனது கணவரின் உடன்பிறந்த சகோதரர் திருமணம் ஆகி தனியாக வாழ்ந்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது கணவர் என்னுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று கும்பகோணம் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் என் கணவரிடம் இருந்து விவாகரத்து கோரி கும்பகோணம் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நானும் எனது அக்கா, அம்மா, அக்காவின் கணவர் எங்களோடு ஒரே குடும்பமாக வசித்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் தற்போது எனது அக்காவின் கணவருடன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது அக்காவிற்கும் அவரது கணவருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு தனியாக பிரிந்து வாழ்கிறார்கள் என்றால் சரியல்ல. எனக்கும் எனது கணவருக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டிற்காக எனது அக்கா கணவர் ஊர் முக்கியஸ்தர்களை வைத்து பஞ்சாயத்து பேசினார்கள் என்றால் சரியல்ல. கே.பி. செல்வம் என்பவர் பஞ்சாயத்து பேசியபோது எதிர்மனுதாரர்கள் ஜாதியை குறிப்பிட்டு கே.பி. செல்வத்தை திட்டினார்கள் என்றாலும் அது சம்மந்தமாக திருவிடைமருதுார் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து எதிர்மனுதாரர்கள் பிணையில் வந்துள்ளார்கள் என்றால் எனக்கு திருமணம் செய்து வைத்ததால் கே.பி. செல்வம் எனக்காக பேச வந்தார். நாங்கள்தான் கே.பி. செல்வம் எங்களுக்கு திருமணம் செய்து வைத்ததால் பொதுவாக இருந்து சமரசம் பேச சொன்னோம் என்றால் சரிதான். எனது கணவர் சம்பாதித்த பணத்தை எனது வங்கி கணக்கிற்கு அனுப்பினார் என்றால் சரிதான். வங்கி ஏடிஎம் கார்டை எனது மாமியார் பயன்படுத்தி எனக்கான செலவு தொகையை மட்டும் கொடுத்தார். எனது கணவர் மயிலாடுதுறையில் என் பெயரில் வீட்டுமனை வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல. எனது நகைகை விற்று மயிலாடுதுறையில் என் பெயரில் வீட்டுமனை வாங்கினோம். மேற்படி விபத்தை நிரூபணம் செய்ய ஆவணங்கள் தாக்கல் செய்ய முடியுமா என்றால்

ஆவணங்கள் அனைத்தும் எனது கணவர் வசம் உள்ளது. நான் திருமணத்திற்கு பின்னிட்டு எனது கணவருடன் அடிக்கடி சண்டை போட்டு எனது தாயார் வீட்டிற்கு வந்துவிடுவேன் என்றால் சரியல்ல. எனது கணவர் எனக்கு குழந்தை பிறக்க வேண்டும் என்று மயிலாடுதுறை, கும்பகோணம் ஆகிய ஊர்களில் மருத்துவ சிகிச்சைக்கு அழைத்து சென்றார் என்றால் சரியல்ல. நான்தான் எனது கணவரை பரிசோதனை செய்ய வேண்டி மருத்துவ சிகிச்சைக்காக அழைத்து சென்றேன். எலந்தகுடியில் வாங்கிய இடத்தை எனது கணவர் வீடு கட்ட அனுமதி கொடுத்தார் என்றால் சரியல்ல. நாங்கள் இடத்தை வாங்கி நானும் எனது அம்மாவும் நின்று வீடு கட்டினோம். வீடு திறப்பு விழாவிற்கு எனது கணவரை அழைத்தோம் என்றால் சரிதான். எனது கணவர் அனுப்பிய பணத்தில்தான் வீடு கட்டினோம் என்றால் சரியல்ல. எனது கணவர் அனுப்பிய பணத்தை மூவருமாக பயன்படுத்தி வீடு கட்டாமல் ஏமாற்றியதால் என் கணவர் எங்களிடம் கணக்கு கேட்டார் என்றாலும் அதனால் கருத்து வேறுபாடு ஏற்பட்டு நான் எனது தாயார் வீட்டிற்கு வந்து விட்டேன் என்றாலும் சரியல்ல. 17.07.2022 ம் தேதி எனது கணவர் என்னை தாக்கியது சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். மேற்படி விவிரத்தை நான் மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் சொல்வதுபோல் 17.07.2022 ம் தேதி எனது கணவர் என்னை தாக்கியது சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 22.07.2022 ம் தேதி கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றாலும் 24.07.2022 ம் தேதி போலிசார் எங்களை விசாரித்தார்கள் என்றாலும் நான் சேர்ந்து வாழ சம்மதம் என்று எழுதி கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. எனது கணவர் என்னுடன் சேர்ந்து வாழ தற்போது தயாராக உள்ளார் என்றாலும் நான்தான் எனது தாயார், அக்கா, அக்காவின் கணவர் ஆகியோர் பேச்சை கேட்டு

சேர்ந்து வாழ மறுக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது அக்கா வீட்டில் எனது அக்கா, அக்காவின் கணவர் மூவரும் வசித்து வருகிறோம் என்றால் சரியல்ல. நானும் எனது அம்மாவும் ஆடுதுறையில் வசித்து வருகிறோம். நான் என் கணவருக்கு எதிராக தொடர்ந்து பல புகார்களை கொடுத்து நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததால் என் கணவர் வெளிநாடு செல்லாமல் வீட்டில் வருமானம் இல்லாமல் வாழ்ந்து வருகிறார் என்றால் சரியல்ல. 17.07.2022 ம் தேதி அன்று எனது கணவரிடம் இருந்து எனக்கு செய்த சீர் சாமான்கள் மற்றும் நகைகள் அனைத்தையும் எடுத்து வந்துவிட்டேன் என்றால் சரியல்ல. என் கணவர் வீட்டில்தான் உள்ளது. என் கணவர் வெளிநாட்டில் சம்பாதித்த பணத்தை என் வங்கி கணக்கு மூலம் நான் பெற்று கையாடல் செய்தேன் என்றாலும் அதை கேட்டதால் நானும், எனது அம்மா, அக்கா கணவர் ஆகியோர் எதிர்மனுதாரருக்கு எதிராக பொய்யாக மனு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. ( எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டிகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

என் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**Sd/- P. Rangeshwari,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர் (FAC).**